

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும், திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களும், நேற்று முன்தினம் (22.8.2026) மாலை, சென்னை – திருவான்மியூரில் நடைபெற்ற – டாக்டர் ஐ.பெரியாண்டவர் அவர்களின் புதல்வர் சந்திராதித்ய ராஜா – சாம்பவி ஜெய்ஸ்வால் ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார்கள்.

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இயக்குநர் அமிர்தம் இல்லத் திருமணம்!

## உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

**சென்னை, ஆக. 24-**

**இயக்குநர் அமிர்தம் அவர்கள் இல்லத் திருமணவிழா, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் - கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (ஆக.24 - திங்கள் கிழமை) நடைபெறுகிறது.**

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு :-

இயக்குநர் அமிர்தம் - திருமதி வசந்தா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், (நினைவில் வாழும்) பெ.பெரியசாமி - மாசிலாமணி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், டாக்டர் பெ. சதீஸ் குமார் - டாக்டர் ச.கலைச்செல்வி ஆகியோரின் புதல்வியு மான டாக்டர் ச.இலக்கியாவிற்கும் - கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், (நினைவில் வாழும்) கு.கோபால ரெட்டி - கோ.நஞ்சம்மா ஆகியோரின் மகன் வழிப் பேரனும் ஓசூர் கே. கும்மிரெட்டி - எஸ். ரூபா ஆகியோரின் புதல்வருமான டாக்டர் கு.கிரிதராவிற்கும் திருமணம் இன்று (24.08.2026 - திங்கள்கிழமை) காலை 9.15 மணியளவில் சென்னை - திருவான்மியூர் - ‘ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டர்’ திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று - திருமணத்தை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

இயக்குநர் அமிர்தம் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார். முன்னதாக - மணவிழா வரவேற்பு நேற்று (23.08.2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது. இம்மணவிழாவில் கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை அ. குணாநிதி அமிர்தம், கு.ஹேமமாலின் குணாநிதி, கு.சூர்யா குணாநிதி, கு.ஸ்ரேயா குணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

## ‘நீட்’ தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன!

# சட்டமன்றத்தில் ஆக்கப்பூர்வமான பிரச்சினைகளை விவாதிக்க வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி!

சிவகங்கை. ஆக.24–

சிவகங்கையில் திராவிடர் கழகத்தின் சார்பில் எதிர் நீச்சலில் வென்ற பெரியார் 80வது ஆண்டு திறந்தவெளி மாநாடு சண்முக ராஜா கலையரங்கில் நடைபெற்றது.

இதில் பங்கேற்பற வந்த திராவிட கழகத்தலைவர் கி. வீரமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது.

நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதாக புகார்கள் தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது.

தமிழக மற்றுமின்றி பல்வேறு மாநிலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள் .

இது ஒரு மிகப்பெரிய தவறான முடிவாகும். எனவே நீட் தேர்வை ரத்து செய்யப்பட்டு முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் வரவேற்கத்தக்கது.

ஆனால் மாற்றம் என்பது மக்



களை ஏமாற்றும் வகையில் அமையக்கூடாது . போராட்டத்தில் ஈடுபடுவோரை தடுக்க அவருக்கு ஆதரவாக செயல்படுபவர்களின் பட்டியலை எடுக்குமாறு கணக்கெடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

விட்டுள்ளது.இது தலைமைச் செயலாளர் பிறப்பித்த உத்தரவு என்று கூறுகிறார்கள். இதில் தலைமைச் செயலாளர் தனியாக செயல்பட டாரா. அல்லது முதல்வர் விஜய் கூறி செயல்பட்டாரா என்பதை பொதுமக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் தெளிவாக விளக்கிட வேண்டும். ஊழல் இல்லாத அரசு என்பது குறித்து வரவேற்கத்தக்கதாகும் ஊழல் என்பது லஞ்சம் பெறுவது மட்டுமில்லை. தவறான நடவடிக்கையுமே ஊழல் என்று கருதப்படும் .தேர்தல் முறையில் மாற்றம் தேவை என்று மக்கள் கருதுகிறார்கள். சட்டப்பேரவை நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புவது வரவேற்கத்தக்கது ஆனால் அங்கு நிகழும் நிகழ்ச்சிகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப் பட்டாலும் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. எனவே ஆளுங்கட்சி எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் சட்டசபையில் நடந்து கொள்ள வேண்டும் .சட்டசபை என்பது மக்கள் பிரச்சனை விவாதிக்கப்படும் இடமாக இருக்க வேண்டும் .

தனிப்பட்ட காழ்ப் புணர்ச்சியில் பேசும் இடமாக மாறக்கூடாது.

இவ்வாறு கி.வீரமணி கூறினார்.

தொடர்ந்து சண்முகராஜா கலையரங்கில் கீ. வீரமணி தலைமையில்எதிர்நீச்சலில் பெரியார் நடை பெற்ற 80வது ஆண்டு விழா திறந்தவெளி மாநாட்டில் தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார்.

மாவட்ட திராவிட கழக தலைவர்ச.அனந்த வேல் வரவேற்று பேசினார். மாவட்டச் செயலாளர்கள் பெரு.ராஜாராம்,சி.செல்வமணி,பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. புகழேந்தி , மணிமேகலை சுப்பையா,காரைக்குடி மாவட்ட தலைவர் வைகறை, க.வீ.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வைத்தார்கள். வழக்கறிஞர் ச.இன்பநாதன் மாநாட்டினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தந்தை பெரியார் படத் தினை கழக காப்பாளர் சாமி திராவிட மணி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திருமலை முத்து ராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார் . இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், பொதுக்குழு உறுப்பினர் கரு.அசோகன் ,துணைச் செயலாளர் வில்லிபட்டி ராமமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன், வழக்கறிஞர் ஆதி.அழகர்சாமி வர்த்தக அணிஅனிபா, தி. என்னா ரெஸ் பிராட்லா உட்பட மாவட்ட முழுவதும் இருந்து திராவிட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.தி.க. மாவட்ட துணை செயலாளர் தங்கராஜன் நன்றி கூறினார்.

# ‘நீதியரசர் ஏ.கே.ராஜன் கமிட்டி அறிக்கை’ நூல் வெளியீடு!

## டாக்டர் சுபேர்கான் – இந்திரகுமார் தேரடி சிறப்புரை!

சென்னை,ஆக.24-

நம் சமூகத்தின் எதிர்காலத்தையும் நீதிக்கு எதிரான போராட்டத்தையும் பேசும் ஒரு பொன்னான நிகழ்வாக நீட் தேர்வின் தாக்கத்தை விரிவாக ஆய்வு செய்து அளிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க “நீதியரசர் ஏ.கே.ராஜன் கமிட்டி அறிக்கை” நூல் வெளியீட்டு விழா 22.8.2026 - சனிக்கிழமையன்று மாலை 5 மணியளவில் அரும்பு அரங்கம், தேனாம்பேட்டை, சென்னை (அண்ணா அறிவாலயம் அருகில்) நடைபெற்றது.

இந்நிகழ்வில் டாக்டர் சுபேர்கான் (செயலாளர் தி.மு.க. சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு), இந்திரகுமார் தேரடி (ஊடகவியலாளர்), சரண்யா நடராஜன் (வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்), கு.பா.ஈஸ்வர் மூர்த்தி (தமிழ் மாணவர் மன்றம்) ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நிகழ்ச்சியை குயிலன் தொகுத்து வழங்கினார்.

யாழ் திலீபன் நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் நீதிக்காக குரல் கொடுக்கும் உணர்வாளர்கள் பங்கேற்றனர்.

## கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை! அன்வர் ராஜா தலைமை!

# தி.மு.க. தலைமை இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

## இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் அறிவிப்பு!

சென்னை, ஆக.24-

தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி முன்னிலை வகிக்கிறார். இலக்கிய அணி தலைவர் அன்வர் ராஜா தலைமை வகிக்கிறார்.

எல்லோருக்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் ஆட்சியின் கழகத் தலைவர் தளபதியாரின் வழியில் கழக முப்பெரும் விழா இவ்வாண்டு பட்டிதொட்டி எங்கும் சிறப்புடன் விழாக்கோலம் பூண்டிட கழக இலக்கிய அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் 28.8.2026 காலை 10:30 மணி அளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை இலக்கிய அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக இலக்கிய அணி அமைப்பாளர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## துறைமுகம் மேற்குப் பகுதி சார்பில் கலைஞர் நினைவு நாள்! பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.முரளி தலைமை!

# அன்னை தயாளு அம்மாள் பயிற்சிப் பள்ளியில் மாணவர்களுக்கு நலஉதவிகள்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி உரையாற்றுகிறார்!

சென்னை, ஆக.24-

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா போராளி 9 ““எளியோர் வாழ்வை உறுதி செய்வோம்! என்றும் கலைஞர் புகழை சொல்வோம்!! எனும் தலைப்பில் இன்று (24/08/26 திங்கட்கிழமை) மாலை 4 மணி அளவில் சென்னை பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ் முரளி தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எம் விஜய குமார்,

ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு ,இசட் ஆசாத், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா,ராஜேஷ் ஜெயின், இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, நா.ரஞ்சித் விஜயாலயன், பி.விஜயகுமார், எல். சம்பத்குமார், எம்.விநாயகம் வெ.பரிமளம், ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, மா. முத்துக்குமார், ந. சுந்தரம், சன்எஸ் சந்தியாகு, வி.சந்தான லட்சுமி, சி.ப. ஜெயராமன், ஆ.நா.பார்த்திபன், கே.கவியரசு எல். சத்யநாராயணன், எஸ் புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், மா. ஜெய்சங்கர், பா. கதிரவன் ஆர். ரவிச்சந்திரன், ஜி.ராம்மூர்த்தி, பா.அண்ணாதுரை, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலஉதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அன்னை தயாளு அம்மாள் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு தையல் இயந்திரம், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை, மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்த பெண்களுக்கு சுழல் நிதி, திருநங்கைகளுக்கு நல திட்டம், விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்களை கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி புகழுரைக்கிறார்.

மேலும் இப் புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன் தயாநிதி மாறன் எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி.,

ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், பி.கே. மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், கே. சந்துரு, சி. மகேஷ் குமார், மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், புனிதவதி எத்திராஜன், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ. ஜெயின், வே. வாசு, ஐசிஎப்.வ. முரளிதரன், எ.நாகராஜன், ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி.ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சொ.வேலு, வி.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ. மணி, எம்.பி.உதயசங்கர், சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி. பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ.பாலமுருகன், ஜி.ஜே. பிரபு, கே.வினோத், எஸ்.தனசேகர், நா.ரஞ்சித் விஜயா லயன், எல்.பி. எஃப் மோகன், ஜி.தாமோதரன், நா. துலுக்கானம், கு.கிருஷ்ணமூர்த்தி, எம். பெரோஸ் கான், கா.ராஜ் முஹம்மது, ஆர்.எஸ். சித்திக், இரா. வீரமணி, ம.அசோக் குமார் எம் விநாயகம், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்டக் கழகச் செயலாளர் டி.சதீஷ்குமார், வே.பா. பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## தமிழ்நாட்டில்

# பா.ஜ.க. ஆட்சியை நடத்தி வருவது நம்பிக்கை துரோகமில்லையா முதல்வரே!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

*சென்னை, ஆக. 24-*

*சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு சமூக வலைதளத்தில் விடுத்துள்ள பதிவு வருமாறு:-*

*“குறை பிரசவம்” போல் தேர்தலில் வெற்றி பெற்ற த.வெ.க.வை இங்குபெட்டரில் வைத்து ஆளுநர் காப்பாற்றியதால் காங்கிரஸ், விடுதலைச்சிறுத்தைகள், முஸ்லிம்லீக் மற்றும் இடதுசாரி கட்சிகளின் துணையோடு ஆட்சி அமைத்த விஜய், தற்போது RSS சித்தாந்தம் கொண்ட பா.ஜ.க. ஆட்சியை தமிழகத்தில் நடத்தி வருவது நம்பிக்கை துரோகம் இல்லையா CM sir?*



*இந்தியாவின் அடுத்த பிரதமர் பதவிக்கு “ராகுல் காந்தி தகுதி இல்லை” என்பது போலவும், “அடுத்த பிரதமர் விஜய் தான்” என்றும் சட்டப்பேரவையில் ஒரு அமைச்சர் பேசிய போது காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் வெட்கமின்றி மேஜையைத் தட்டி ரசிக்கும் கேவலமான செயலில் ஈடுபட்டதுதான் வேடிக்கை. விஜய்க்கு தேசிய அரசியல் ஆசை காட்டி அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்கி அந்த இடத்தை பிடிக்க உங்களோடு இருக்கும் குள்ள நரி கும்பலின் திட்டத்தை அறிவீர்களா CM Sir?*

*“அரசன் ஒரு முள் செடியை நட்டால் அமைச்சர்கள் முள் காட்டையே உருவாக்கி விடுவார்கள்” என்ற வடஇந்திய பழமொழிக்கு ஏற்ப பொய்களை உண்மை போல் ரீல்ஸ் களாக்கி நீங்கள் தொடங்கி வைத்த செயல், தற்போது அமைச்சர்கள் முதல் த.வெ.க. அடிமட்ட தொண்டர்கள் வரை பரவி எங்கும் ரீல்ஸ் எதிலும் ரீல்ஸ் என்ற நிலை உருவாகி சட்டமன்றத்தில் சபாநாயகரால் நீக்கப்பட்ட வீடியோக்களைக் கூட Fake id மூலம் ரீல்ஸ் விடும் கேவலமான செயலை செய்துவருகிறீர்களே CM sir!*

*தவெக ஆட்சியில் தமிழக மக்களுக்கு தனியார் மருத்துவமனையில் நோயாளி இறந்தால் மருத்துவ கட்டணம் செலுத்த தேவையில்லை என்றும், பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவோருக்கு உடனடி மரண தண்டனை என்றும், கோவில் உண்டியல் வருமானத்தில் கல்விக் கூடம் கட்டி மக்கள் பயனடைந்து வருவது போன்றும் பொய்ப் பிரச்சாரங்களை வடமாநிலங்களில், பல நூறு கோடி ரூபாய் செலவில் இந்தியில் ரீல்ஸ் தயாரித்து மக்களிடையே பிரச்சாரம் செய்து குழப்பத்தை ஏற்படுத்தி வரும் த.வெ.க.வின் நரித்தனத்தை இந்தியாவே பார்த்து சிரிப்பதுடன், உங்கள் fake id மூலம் பொய் Reels பரப்புவதை நீதிமன்றம் சென்று தண்டனை வாங்கித்தரவும் மக்கள் தயாராகி வருகின்றனர் CM sir !*

*இவ்வாறு மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.*

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் திராணி இல்லாமல்

# த.வெ.க.வினர் குதர்க்கமாகப் பேசி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்!

## முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. கண்டனம்!

*சென்னை, ஆக.24-*

*அமைச்சர் நிர்மல் குமார் பேச்சிற்கு கழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலடி கொடுத்துள்ளார். “எதிர்க்கட்சிகளின் கேள்விக்குப் பதிலளிக்க திராணி இல்லாமல் குதர்க்கமாகப் பேசி குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்ற னர். நான் கேட்ட கேள்விக்கு கடைசி வரை அமைச்சர் பதில் சொல்லவே இல்லை” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*செந்தில் பாலாஜி கூறியதாவது:-*

*த.வெ.க. அரசு அமைந்த பிறகு ஆட்சி நடத்துவதை விட எதிர்க்கட்சிகள் மீது வழக்குப் பதிவு செய்வதில் தான் சிறப்புக் கவனங்களை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு வழக்கல்ல 10 வழக்குகள் அல்ல எத்தனை வழக்குகள் போட்டாலும் அதைச் சந்திப்பதற்கும் , சட்டப்படி எதிர்கொள்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.*

*ஒரு சட்டமன்றத்தினுடைய நிகழ்வு என்பது அங்கு ஆரோக்கியமான விவாதம் நடக்க வேண்டும். நாட்டினுடைய நிலைகளை குறித்து சட்டமன்றம் நடைபெறுகின்ற பொழுது உறுப்பினர்கள் கேள்வி எழுப்புவதும் அதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்வதும் முதலமைச்சர் பதில் சொல்வதும் இது வரை இருந்த ஒரு நடைமுறை. ஆனால் இன்றைய த.வெ.க. அமைச்சர்கள் எதிர்க்கட்சிகள் கேட்கக்கூடிய கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் பதில் தெரியாமல் வேறு விதமாக அவர்கள் அந்த பதில்களைச் சொல்லி அந்த இடத்தில் ஒரு கூச்சல் குழப்பத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றார்கள்.*



*நான் நேற்று என்ன கேட்டேன். மின்சாரத்துறை அமைச்சரிடம், “18 ஹார்ட் டிஸ்க் காணாம போயிடுச்சு, கண்டுபிடிச்சது 38 ஹார்ட் டிஸ்க்னு சொன்னீங்க - மீதி இருக்கற 20 ஹார்ட் டிஸ்க் எங்க இருந்து கண்டுபிடிச்சது? உரிய விளக்கம் என்ன?” என கேள்வி கேட்டால், அதற்கு கடைசி வரைக்கும் அவர் பதிலே சொல்லவில்லை. திரும்பவும் ஒரு கேள்வி கேட்டேன், “நீங்க வெள்ளை அறிக்கையில தி.மு.க. ஆட்சியில எங்களுடைய முதலமைச்சராக இருந்த திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகர் மாண்புமிகு தளபதி அவர்கள் முன்னெடுத்த திட்டங்களை வெள்ளை அறிக்கையிலே சுட்டிக் காட்டி இருக்கறீங்க, 99000 மின் மாற்றிகள் மாற்றப்பட்டிருக்கின்றன, புதிதாக தி.மு.க. ஆட்சியில் அமைக்கப் பட்டிருக்கின்றன. 2020-21ல் 14,500 கோடி இருந்த மின்வாரியத்தினுடைய ஓராண்டு கடன் கடந்த 2025-26-ல் 933 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை வெள்ளை அறிக்கையிலே சொல்லி இருக்கீங்க.*

*ஆக முழுசா வெள்ளை அறிக்கையில தி.மு.க. அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டுச் சொல்லிவிட்டு நேற்று சட்டமன்றத்தில் வந்து தி.மு.க. ஆட்சியில் எந்தவிதமான பணிகளும் நடக்கவில்லை என்கிறது போல ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார்கள். நான் அதைத்தான் கேள்வியாகக் கேட்டேன், நீங்களே வெள்ளை அறிக்கையிலே சொல்லிருக்கீங்கன்னு இப்ப அதுக்கு பதில் சொல்லணும். அதுக்கு சட்டமன்றத்தில் பதில் சொல்வதை விட்டுவிட்டு வேறு விதமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது இது போன்ற நிகழ்வுகளை சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் முன்னெடுக்கின்றார்கள்.*

*ஒரு கேள்விக்கு பதில் தெரியாமல் சட்டமன்றத்தில் பதிலளிக்கத் திறமை இல்லாமல் திராணி இல்லாமல் இதுபோன்ற குதர்க்கமான வார்த்தைகளைப் பயன்படுத்தி சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். உரிய நேரத்தில் மக்கள் அவர்களுக்கு உரிய பதிலைத் தருவார்கள்.*

*ஒரு முதலமைச்சர் தான் எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணம் என்பது என்ன? யாரிடமும் எதுவும் மறைக்க மாட்டேன். உண்மையாக நேர்மையாக நடந்து கொள்வது தானே அவருடைய உறுதிமொழியில் பதவி ஏற்று இருக்கார். அப்ப கையில இருந்தா நீங்க வெளியிட வேண்டியது தானே.?*

*எந்தத் துறையில் தவறு நடந்தது எவ்வாறான தவறு நடந்தது? யார் தவறு செய்தார்கள்? அவர்கள் மீது நாங்கள் வழக்கு பதிவு செய்கிறோம் என்று அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே.? இதுல என்ன நேரம் காலம் ஜோசியம் பார்த்து நேரம் காலம் பார்த்தா அதை வெளியிட முடியும். அதான் எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் மிக தெளிவாகச் சொன்னார். அப்படி ஏதேனும் உங்களிடம் இருந்தால் வெளியிடுங்கள் என்று நேற்று கேட்டார். இப்ப வரைக்கும் அவங்க வெளியிடல. மூணு பைல் கட்டி வச்சிருக்கு, முடிச்சு போட்டு வச்சிருக்கு, அந்த பைல அவிழ்த்தால் வெளியில வந்துரும்னு சொன்னவங்க 24 மணி நேரம் ஆச்சு நேற்றே அதை வெளியிட வேண்டியதுதானே. அவங்ககிட்ட இருந்தாதானே வெளியிட முடியும்.*

*இந்த ஆட்சி 100 நாள் கடந்து போயிருக்கு மக்களுக்கு எந்தவிதமான ஒரு பயனும் இல்லாத அரசாக இந்த த.வெ.க. அரசு உள்ளது.*

*இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.*